முருகப்பெருமான் துணை

**மகான் பூசலார் நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.01.2022, புதன்கிழமை

1. தவசியே கலியுகம் தனை மாற்ற
தணிகாசலன் சக்தியாக வந்த
அவதார ஞானியே அரங்கனே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா பிலவ சிலை திங்கள்
இருபானோர் திகதி புந்தி வாரம்
(பிலவ வருடம் மார்கழி மாதம் 21ம் நாள், 05.01.2022 புதன்கிழமை)
இயம்பிடுவேன் பூசலார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயிர்கொலை நீக்கி வாழுகின்ற
ஞானதேசிகன் சன்மார்க்க நெறியை
நம்பிக்கை வைத்து மக்கள்வர
4. வருகவே மக்களிடை தெளிவும்
வள்ளல் தன்மை சிறப்பறிவும்
முருகப்பெருமானை வணங்குகின்ற
முழுமையான அறிவும் தெளிவும் ஏற்பட்டு
5. ஏற்பட்டு கலியுக மக்களும்
ஏழாம்படைவீட்டு தொடர்பு கூட்டி
அற்புதம்பட வழிபாடு செய்து
அரங்கஞானி அவதாரம் உணர்ந்து
6. உணர்ந்து முழுமை ஞானமதை
உயர்வாய் அடைய நேரும்
உணர்வாக உங்களுக்குள் ஞானி
உபதேசம் சக்தியாகப் பரவி
7. பரவியே நல்ல தலைமையும்
பண்பானவர்களின் ஆளுமையும்
துறவிகள் குருமார்கள் துணையும்
தொடர்ந்து வந்து உலக மக்களை தேற்றி
8. தேற்றியே தொண்டர்படையெனும்
தெய்வ சக்தி பரவி உலகினில்
ஆற்றல்பட சரவணச்சுடராகி
அகிலமெலாம் பரவி ஏற்றம் காணும்
9. காணவே சைவநெறி பரவ
கலிகால கஷ்டம் தீவினைகள்
தானாக விலகி ஓடியே
தரணியே அமைதி காணும்

10. காணவே ஞானத்தலைவனின்
கந்தமகா சக்திவடிவாக
ஞான தேசிகன் அருளும்
ஞானமே உலகை மாற்றும்

11. மாற்றம் தரவல்ல குருராசனே
மகத்துவம் அறிய உலகமே
ஆற்றல்பட ஞான ஆட்சியை
அரங்கனால் உலகம் அடைந்து மாறும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–